அ.வ.எண். 28/2018

பெயர்- ராமசாமி செட்டியார் (பி.வா.சா.1)

நாள்- 07.08.2019

வாதி தரப்பில் கு.வி

என்னுடன் பிறந்தவர்கள் 1) நான் 2) பெருமாள்ராஜ் 3) பாண்டி என்ற பழனிச்சாமி 4) லட்சுமணப்பெருமாள் 5) நாராயணசாமி 6) சீனியம்மாள் 7) சரஸ்வதியம்மாள் ஆகியோர்கள். என் அப்பா பெயர் பெருமாள்செட்டியார். என் தாத்தா பெயர் சொக்கலிங்க செட்டியார். வாதி அவர் பெயரில் உள்ள பட்டாவை வைத்து சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் அப்பா அம்மா பெயரில் உள்ள சொத்துக்களின் பட்டா எண். சர்வே எண் எனக்கு தெரியாது. சொத்துக்கள் அனைத்தும் பூர்விக சொத்துகள். முதல் விசாரணையில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியும். நான் தான் அதற்கான விபரம் சொன்னேன். நான் இந்த நீதிமன்றத்தில் வேறு வழக்கிற்கு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை பெருமாளம்மாள் என் அண்ணன் பெருமாள் ராஜ் மகள். பெருமாளம்மாள் தாக்கல் செய்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் சொத்துக்களை நாங்கள் யாரும் பாகபிரிவினை செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளேனா என்று கேட்டால் சரிதான் பாகப்பிரிவினை செய்யவில்லை. பெருமாளம்மாள் தாக்கல் செய்த வழக்கில் சொத்து ஏற்கனவே பாகம் செய்ததாக நான் சாட்சியம் அளிக்கவில்லை. என் அப்பா இறந்து சுமார் 15 வருடங்களுக்கு மேல் இருக்கும். என் அப்பா உயிருடன் இருக்கும்போது 14.12.86 அன்று பாகம் பிரித்து கொண்டதாக கூறியிருந்தால் தவறுதான். வா.சா.ஆ.6ல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. வா.சா.ஆ6 பாகப்பிரிவினை செய்ததாக கூறியிருந்தால் அது தவறுதான். பாகப்பரிவினை படி எனக்கு எந்த சொத்து கிடைத்தது என்று கேட்டால் பாகப்பிரிவினை நடக்கவில்லை இந்த வழக்கிற்கு பின்பு தான் வாதி எந்த சொத்தில் பட்டா ஏற்பட்டது என்று சொன்னார். சர்வேஎண்.,67/2 என் பெயருக்கு பட்டா உள்ளது என்று சேர்னனால் இந்த வழக்கிற்கு பிறகுதான் எனக்கு தெரியும். சர்வேஎண்.67/2யை நான் மட்டும் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் மொத்த சொத்துக்களையும் பொதுவாக அனுபவம் செய்து வருகிறோம். பாண்டி என்ற பழனிச்சாமிக்கு சர்வேஎண்.23/1ஏ, 247ல் சொத்து தனியாக உள்ளது என்று சொன்னால் பொதுவாகதான் அனுபவம் செய்து வருகிறோம். நாராயணசாமிக்கு சர்வேஎண்.247/4ஏல் சொத்து தனியாக உள்ளது என்று சொன்னால் எல்லா

சொத்துக்களும் பொது சொத்துகள்தான். என் பெற்றோர்களுக்கு பாத்தியபட்ட சொத்துகளை நாங்கள் தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் பொதுவாகதான் அனுபவம் செய்து வருகிறோம். பெற்றோர்கள் வீட்டில யாரும் குடியிருக்கவில்லை பங்கு பாகம் பிரிக்கவில்லை. என் உயிருடன் இருக்கும்போதே சொத்துகளை நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றும் பாகபிரிவினைபடி தனிதனியே அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கபட்டதா என்று கேட்டால் வாதியைதான் எச்சரித்து அனுப்பிவிட்டார்கள். நாங்கள் வாதியின் அனுபவத்தினை இடையூறு செய்யமாட்டோம் என்று காவல் நிலையத்தில் எழுதிகொடுத்தோமா என்று கேட்டால் விசாரணைக்கு ஆஜர் ஆனதற்கு மட்டும் தான் எழுதிகொடுத்தோம். வாதி தான் கையெழுத்து போடாமல் ஓடிவிட்டார். அதன்பின்பும் காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்தாரா என்று கேட்டால் இல்லை. மாவட்ட ஆட்சி தலைவருக்கு பாண்டி என்ற பழனிசாமி மகன் ரவி மனு கொடுத்தார். அந்த மனுமீது நடவடிக்கை எடுக்காமல் நிராகரிக்கபட்டது என்று சொன்னால் இல்லை. எஸ்.எல்.ஆர். பதிவேட்டில் யார் பெயருக்கு சொத்துகள் உள்ளது என்று கேட்டால் பொதுவாகதான் உள்ளது. சொத்துகள் ஏற்கனவே பாகம் பிரிக்கபட்டது என்றும் நாங்கள் தடுத்ததால் தான் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யபட்டது என்றும் வாதிகோரியபடி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அவசியமான தரப்பினர்கள் இந்த வழக்கில் கட்சி சேர்க்கபட்டுள்ளனர் என்றும் வழக்கு பாதிப்படையவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.